**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.4724/ஆ5/2024, நாள். 25.11.2024**

.....

பொருள் பள்ளிக் கல்வி – இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 75–ஆம் ஆண்டு நிகழ்ச்சிகள் – அரசு அலுவலகங்கள் மற்றும் பள்ளிகளில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையை வாசித்தல் மற்றும் பள்ளிகளில் பல்வேறு போட்டிகள் நடத்துதுல் – தொடர்பாக

பார்வை சென்னை – 6, பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் கடித ந.க.எண்.077713/இ/இ1/2024, நாள். 25.11.2024

.....

2024ஆம் ஆண்டு, நவம்பர் 26–ஆம் நாள் 75வது இந்திய அரசியலமைப்பு தினத்தை முன்னிட்டு தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்துத் துறைகளிலும், மாண்பமை உயர்நீதிமனறம் மற்றும் மாவட்ட ஆசியர் அலுவலகங்கள் உள்ளிட்ட அனைத்து துறை தலைமை அலுவலகங்கள், அனைத்து சார்நிலை அரசு அலுவலகங்கள், மாநில அரசின் அனைத்து அலுவலகங்கள், தன்னாட்சி அதிகார அமைப்புகள் / நிறுவனங்கள், தன்னாட்சி அரசு நிறுவனங்கள், அனைத்துப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் இந்திய அரசியலமப்புச் சட்டத்தின் முகப்புரையை 26.11.2024 அன்று காலை 11.00 மணிக்கு அந்தந்த அலுவலகங்கள் / இடங்களிலிருந்து வாசிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, 26.11.2024 அன்று காலை 11 மணிக்கு வேலூர் மாவட்டம், பள்ளிக்கல்வித் துறையின் கீழ் செயல்படும் அனைத்து அரசு அலுவலகங்கள் மற்றும் அனைத்து வகை பள்ளிகளில் இந்திய அரசியலமப்புச் சட்டத்தின் முகப்புரையை வாசிக்க தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பள்ளிகளில் இந்திய அரசியலைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் அரசியலைப்பு நெறிமுறைகள் பற்றிய பேச்சுப் போட்டிகள் / கருத்தரங்குகள் / வினாடி வினா நிகழ்ச்சிகள் நடத்தி அதன் புகைப்படல் நகல் மற்றும் வெற்றி பெற்ற மாணவர்கள் விவரம் b5secceovellore@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கமாறு அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – இந்திய அரசமைப்புச் சட்டம் – முகப்புரை

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்)
   வேலூர் மாவட்டம்.
   (இவ்வலுவல மின்னஞ்சல் மூலமாக)
2. தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்,
   அனைத்து வகை பள்ளிகள், வேலூர் மாவட்டம்.
   (சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக)

நகல்.

1. சென்னை –6, பள்ளிக் கல்வி இயக்குநர்
   அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. உதவி திட்ட அலுவலர்,
   ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, வேலூர் மாவட்டம்.
3. வட்டாரக் கல்வி அலுவலகர்கள்,
   (மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) மூலமாக)

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம், இந்திய நாட்டினை[1] [இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்],

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,

எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,

சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை

ஆகியவற்றை எய்திடச் செய்யவும்,

அவர்கள் அனைவரிடையேயும்

தனி மனிதனின் மாண்பு,[2] [நாட்டுமக்களின் ஒற்றுமை,

ஒருமைப்பாடு] இவற்றை உறுதிப்படுத்தும்

உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.